நீதித்துறை நடுவர் நீதிமன்றம், மேலூர்

முன்னிலை: செல்வி.த.தென்றல் முத்து, **L.L.M.,**

நீதித்துறை நடுவர், மேலூர்

**2026-**ஆம் ஆண்டு மார்ச் மாதம் **10-**ஆம் நாள் செவ்வாய்கிழமை

ஆண்டுப்பட்டிகை வழக்கு எண்.**65/2012**

**CNR.No.TNMD16-000177-2012**

...

குற்றம் முறையிடுபவர் : அரசுக்காக காவல் ஆய்வாளர்
கீழவளவு காவல்நிலையம்
குற்ற எண்.194/2011

குற்றம் சாட்டப்பட்டவர்கள் : 1) முனியாண்டி, **(**இறப்பு**)**

2) சுப்பையா,
த/பெ.ராமு,
கொன்னப்பட்டி.

3) கணபதி,
த/பெ.சுப்பையா,
கொன்னப்பட்டி.

4) தவமணி,
த/பெ.ஊமத்துரை,
கொடுக்கம்பட்டி.

5) சுமதி,
க/பெ.முனியாண்டி,
கொடுக்கம்பட்டி.

6) பரிபூரணம்,
க/பெ.சீனிவாசன்,
கொன்னப்பட்டி.

7) சுதா,
க/பெ.கணபதி,
கொன்னப்பட்டி.

**(**இந்த வழக்கில் **1-**ம் எதிரி முனியாண்டி என்பவர் வழக்கு நிலுவையில் இருக்கும்போதே இறந்துவிட்டார். அதனால் அவரை பொறுத்து வழக்கு அற்றுப்போக **(Charge abated)** உத்தரவிடப்படுகிறது.**)**

குற்றம் முறையிடப்பட்டது : 2 முதல் 7 எதிரிகள் எதிரி மீது இ.த.ச பிரிவுகள்

THENDRAAL MUTHU DAKSNAMOORTHY
Digitally signed by THENDRAAL MUTHU DAKSNAMOORTHY
Date: 2026.03.10 06:07:37 +0530

| | | |
|---|---|---|
| | | 147, 294(பி), 323 r/w 109 IPC & 4 of TNPHW Act. |
| குற்றம் வனையப்பட்டது | : | 2 மற்றும் 4 முதல் 7 எதிரிகள் மீது இ.த.ச பிரிவுகள் 147, 323 மற்றும் 4 of TNPHW Act-ன் கீழும், 3-ம் எதிரி மீது இ.த.ச பிரிவுகள் 147, 323, 294(பி) மற்றும் 4 of TNPHW Act-ன் கீழும் குற்றச்சாட்டுக்கள் வனையப்பட்டுள்ளன. |
| எதிரிகள் காவலுக்கு உட்படுத்தப்பட்டநாள் | : | 2 முதல் 7 எதிரிகள் முன் ஜாமீன் பெற்றுள்ளார்கள். |
| இறுதி அறிக்கை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்த நாள் | : | 30.11.2012 |
| பல்வகை மனு மற்றும் அதன் முடிவு | : | 1) U/s.70(2) Cr.P.C Warrant recall in Crl.M.P.No.4203 of 2023 = Allowed.<br><br>2) U/s.70(2) Cr.P.C Warrant recall in Crl.M.P.No.1188 of 2025 = Allowed. |
| முதல் விசாரணை மற்றும் குறுக்கு விசாரணை நாள் | : | |

| | Chief | Cross |
|---|---|---|
| PW1 | 06.07.2018 | 06.07.2018 |
| PW2 | 06.07.2018 | 06.07.2018 |
| PW3 | 21.08.2018 | Nil |
| PW4 | 21.08.2018 | Nil |
| PW5 | 21.08.2018 | Nil |
| PW6 | 23.07.2025 | 23.07.2025 |
| PW7 | 23.02.2026 | 23.02.2026 |

| | | |
|---|---|---|
| குற்றவியல் விசாரணை முறைச்சட்டம் பிரிவு 313(1) (ஆ)-ன் கீழ் எதிரிகளை விசாரித்த நாள் | : | 26.02.2026 |
| தலைமறைவான எதிரியின் விபரம் மற்றும் ஆஜர் செய்யப்பட்ட விபரம் | : | A2, A3, A5 & A6 : 28.05.2025 to 25.06.2025<br>A7 : 17.03.2021 to 17.11.2023 |
| மேல் நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்பட்ட இடைக்கால தடை மற்றும் அதன் முடிவு விபரம் | : | Nil |
| தீர்மானம் | : | 2 மற்றும் 4 முதல் 7 எதிரிகள் இ.த.ச பிரிவுகள் |

THENDRAAL MUTHU DAKSNAMOORTHY

Digitally signed by THENDRAAL MUTHU DAKSNAMOORTHY
Date: 2026.03.10 06:07:43 +0530

147, 323 மற்றும் 4 of TNPHW Act-ன் கீழும், 3-ம் எதிரி இ.த.ச பிரிவுகள் 147, 323, 294(பி) மற்றும் 4 of TNPHW Act-ன் கீழும் குற்றவாளிகள் இல்லை என்று தீர்மானம்.

| | |
|---|---|
| தீர்ப்பு | : முடிவாக, 2 மற்றும் 4 முதல் 7 எதிரிகள் மீது இ.த.ச பிரிவுகள் 147, 323 மற்றும் 4 of TNPHW Act-ன் கீழும், 3-ம் எதிரி மீது இ.த.ச பிரிவுகள் 147, 323, 294(பி) மற்றும் 4 of TNPHW Act-ன் கீழும் சுமத்தப்பட்டுள்ள குற்றங்கள் அரசு தரப்பில் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்படவில்லை என்று தீர்மானித்து, சந்தேகத்தின் பலனை எதிரிக்கு அளித்து அவர்கள் குற்றவாளிகள் இல்லை என இந்நீதிமன்றம் முடிவு செய்து, குவிமுச பிரிவு 248(1)-ன் கீழ் 2 முதல் 7 எதிரிகளை விடுதலை செய்து, இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது. இவ்வழக்கில் வழக்கு சொத்துக்கள் எதுவும் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. அதனால் அது பற்றி உத்தரவு எதுவும் பிறப்பிக்கவில்லை. மேலும் 2 முதல் 7 எதிரிகள் குவிமுச பிரிவு 437(A)-ன் கீழ் எழுதிக்கொடுத்துள்ள பிணைப்பத்திரம் 6 மாதங்கள் முடிவடைந்த பின்பு தானாக ரத்தாகிவிடும். |

இவ்வழக்கானது கடந்த 30.11.2012-ம் தேதியன்று கோப்பிற்கு எடுக்கப்பட்டு 10.03.2026 அன்று என் முன்னர் இறுதி விசாரணைக்கு வந்த போது அரசு தரப்பில் அரசு குற்றத்துறை உதவி வழக்குரைஞர் நிலை-2 அவர்கள் ஆஜராகியும், 2, 3, 4, 5, 6 எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.V.பாலமுருகன் அவர்கள் ஆஜராகியும், 7-ம் எதிரி தரப்பில் வழக்கறிஞர் திரு.S.M.P.அமலன் அவர்கள் ஆஜராகியும் இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டும், சாட்சி மற்றும் சான்றாவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டும், இதுநாள்வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்த இவ்வழக்கில் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்

THENDRAAL MUTHU DAKSNAMOORTHY

Digitally signed by THENDRAAL MUTHU DAKSNAMOORTHY
Date: 2026.03.10 06:07:48 +0530

<u>தீர்ப்புரை :-</u>

2 மற்றும் 4 முதல் 7 எதிரிகள் மீது இ.த.ச பிரிவுகள் 147, 323 மற்றும் 4 of TNPHW Act-ன் கீழும், 3-ம் எதிரி மீது இ.த.ச பிரிவுகள் 147, 323, 294(பி) மற்றும் 4 of TNPHW Act-ன் கீழும் குற்றச்சாட்டுக்கள் வனையப்பட்டுள்ளன.

**1)** <u>குற்ற இறுதி அறிக்கையின் சுருக்கம்</u> **:**

கடந்த 03.12.2011-ம் தேதி இரவு சுமார் 7.30 மணிக்கு கொன்னப்பட்டி மந்தை பின்பு உள்ள ரோட்டில் 3-ம் எதிரி 1-ம் எதிரியின் தூண்டுதலின் பேரில் அசிங்கமாக பேசிக்கொண்டிருந்தவரை சாட்சி-2 கேட்டதற்கு எதிரிகள் அனைவரும் ஒன்றாக சேர்ந்து கொண்டு நாங்கள் தேர்தலில் ஜெயித்து விட்டோம் உங்களால் முடிந்ததை பார்த்துக்கொள்ளுங்கள் என்று பேசிக்கொண்டு 3, 5 எதிரிகள் உருட்டுக்கட்டையால் சாட்சி-2ன் தலை மற்றும் உடம்பில் அடித்து சாதாரண காயத்தையும், மற்ற எதிரிகள் சாட்சி-2ஐ கையாலும், கல்லாலும் அடித்து சாதாரண காயத்தை ஏற்படுத்திய குற்றம் புரிந்துள்ளார்கள் என்று கீழவளவு காவல் நிலைய சார்பு ஆய்வாளர் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

**2)** இவ்வழக்கு ஆண்டுப்பட்டிகை எண்.65/2012-ஆக இந்நீதிமன்ற கோப்புக்கு எடுக்கப்பட்டு இவ்வழக்கின் எதிரிக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டது. இவ்வழக்கின் 2 முதல் 7 எதிரிகள் அழைப்பாணையின் பேரில் நீதிமன்றத்தில் முன்னிலையானவுடன் குவிமுச பிரிவு 207-ன் கீழ் 2 முதல் 7 எதிரிகளுக்கு வழக்கு ஆவணங்கள் அனைத்தும் இலவசமாக வழங்கி, போதிய அவகாசம் கொடுத்து, 2 மற்றும் 4 முதல் 7 எதிரிகள் மீது இ.த.ச பிரிவுகள் 147, 323 மற்றும் 4 of TNPHW Act-ன் கீழும், 3-ம் எதிரி மீது இ.த.ச பிரிவுகள் 147, 323, 294(பி) மற்றும் 4 of TNPHW Act-ன் கீழும் குற்றச்சாட்டுக்கள் வனையப்பட்டுள்ளது. மேற்படி குற்றச்சாட்டுக்களுக்கு போதிய முகாந்திரம் இருந்ததால் 22.05.2018 அன்று 2 முதல் 7 எதிரிகள் மீது குற்றச்சாட்டுகள் வனைந்து தமிழில் வாசித்து விளக்கி கேட்டபோது 2 முதல் 7 எதிரிகள் குற்றத்தை மறுத்துரைத்துள்ளார்கள். எனவே வழக்கு அரசு தரப்பு சாட்சிக்காக ஒத்திவைக்கப்பட்டது.

**3)** அரசு தரப்பில் அ.சா.1 முதல் 7 வரையிலான சாட்சிகள் விசாரணை செய்யப்பட்டு, அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.5 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. இவ்வழக்கில் சான்று பொருட்கள் எதுவும் கைப்பற்றப்படவில்லை. வழக்கு விசாரணையின் போது, அ.சா.1-ன் மூலம் அ.சா.ஆ.1-ம், அ.சா.6-ன் மூலம் அ.சா.ஆ.2-ம், அ.சா.7-ன் மூலம்

THENDRAAL MUTHU DAKSNAMOORTHY
Digitally signed by THENDRAAL MUTHU DAKSNAMOORTHY
Date: 2026.03.10 06:07:54 +0530

அ.சா.ஆ.3 முதல் அ.சா.ஆ.5 வரையிலான ஆவணங்களும் குறியீடு செய்யப்பட்டுள்ளன. 2 முதல் 7 எதிரிகள் தரப்பில் சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் குறியீடு செய்யப்படவில்லை.

**4) அரசு தரப்பில் சாட்சிகளின் சாட்சியத்திலிருந்து தெரியவரும் வழக்கின் சுருக்கம் :-**

**4.1)** அ.சா.1 ஜெயராஜ் (எ) மலர் தனது சாட்சியத்தில் எதிரிகளை தனக்கு தெரியும் என்றும், சுமார் 6, 7 வருடங்களுக்கு முன்பாக ஒருநாள் மாலை சுமார் 7 மணியளவில் தங்கள் ஊரிலுள்ள மந்தைக்கும் எதிரிகளின் வீட்டிற்கும் இடையே பஞ்சாயத்து பேசிக்கொண்டிருந்தார்கள் என்றும், அப்போது அவர்கள் அசிங்கமாக பேசிக்கொண்டிருந்தார்கள் என்றும், அவர்களிடம் தனது அம்மா சென்று அசிங்கமாக பேசாதீர்கள் என்று சொன்னதற்கு எதிரிகள் அனைவரும் சேர்ந்து கம்பாலும், கையாலும் தனது அம்மாவை அடித்தார்கள் என்றும், அதில் தனது அம்மா கீழே படுத்துவிட்டார் என்றும், தான் தனது அம்மாவை தூக்கும்போது எல்லாரும் தன்னையும் அடித்தார்கள் என்றும், எதிரிகள் தன்னை கம்பை வைத்து வயிறு, நெஞ்சு ஆகிய பகுதிகளில் குத்தினார்கள் என்றும், பிறகு தனது அம்மாவை தூக்கிக்கொண்டு சென்று மேலூர் அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்த்தார் என்றும், அங்கிருந்து மேல்சிகிச்சைக்காக மதுரை அரசு இராஜாஜி மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்த்தார் என்றும், மதுரையில் தன் அம்மா ஒரு வாரம் சிகிச்சை எடுத்துக்கொண்டார் என்றும், மேலூர் அரசு மருத்துவமனையில் சிகிச்சையிலிருக்கும்போது தான் கீழவளவு காவல்நிலையம் சென்று புகார் கொடுத்தார் என்றும், தன்னிம் காட்டப்படும் அ.சா.ஆ.1 புகார் மனுவிலுள்ள கையெழுத்து தன்னுடையது தான் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

**4.2)** அ.சா.2 ராமு தனது சாட்சியத்தில் அ.சா.1-ஐ தனக்கு தெரியும் என்றும், எதிரிகளை தனக்கு தெரியும் என்றும், சுமார் 6, 7 வருடங்களுக்கு முன்பாக ஒரு நாள் சம்பவம் நடந்ததாக சொன்னார்கள் என்றும், சம்பவத்தை பற்றி தனக்கு நேரடியாக தெரியாது என்றும், இரண்டு நபர்களை மருத்துவமனைக்கு அழைத்துச்சென்றதாக சொன்னார்கள் என்று சாட்சியம் அளித்து பிறழ் சாட்சி ஆகியுள்ளார்.

**4.3)** அ.சா.3 தனசேகரன் தனது சாட்சியத்தில் அ.சா.1-ஐ தனக்கு தெரியும் என்றும், எதிரிகளை தனக்கு தெரியும் என்றும், சம்பவம் பற்றி தனக்கு ஒன்றும் தெரியாது என்றும், போலீசார் ஒரு பேப்பரில் கையெழுத்து வாங்கினார்கள் என்றும், வேறு எதுவும் தனக்கு தெரியாது என்றும் சாட்சியம் அளித்து பிறழ் சாட்சி ஆகியுள்ளார்.

THENDRAAL MUTHU DAKSNAMOORTHY
Digitally signed by THENDRAAL MUTHU DAKSNAMOORTHY
Date: 2026.03.10 06:07:59 +0530

**4.4)** அ.சா.4 பனையன் தனது சாட்சியத்தில் அ.சா.1-ஐ தனக்கு தெரியாது என்றும், அ.சா.1-ன் வீடு தூரத்தில் உள்ளது என்றும், எதிரிகளை தனக்கு தெரியும் என்றும், சம்பவம் பற்றி தனக்கு ஒன்றும் தெரியாது என்றும், போலீசார் ஒரு பேப்பரில் கையெழுத்து கேட்டார்கள் போட்டுக்கொடுத்தார் என்றும் சாட்சியம் அளித்து பிறழ் சாட்சி ஆகியுள்ளார்.

**4.5)** அ.சா.5 பழனிச்சாமி தனது சாட்சியத்தில் தன்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரிலுள்ள 2-வது கையெழுத்து தன்னுடையது தான் என்றும், சுமார் 5, 7 வருடத்திற்கு முன்பு இரவு கீழவளவு போலீசார் தனது வீட்டிற்கு வந்து கையெழுத்து கேட்டதன்பேரில் கையெழுத்து செய்தார் என்றும், வேறு ஒன்றும் தெரியாது என்றும் சாட்சியம் அளித்து பிறழ் சாட்சி ஆகியுள்ளார்.

**4.6)** அ.சா.6 மங்கையர்கரசி தனது சாட்சியத்தில் கடந்த 03.12.2011-ம் தேதியன்று மேலூர் அரசு மருத்துவமனையில் பணியில் இருந்தபோது அன்று இரவு 10.10 மணியளவில் தனபாக்கியம் கொன்னைபட்டியை சேர்ந்த அவரை அவரது மகன் ஜெயராஜ் என்பவர் மருத்துவமனைக்கு அழைத்து வரப்பட்டார் என்றும், தனபாக்கியம் அவர்கள் தன்னை 03.12.2011 அன்று இரவு 7.30 மணியளவில் கொன்னைப்பட்டி மந்தையில் வைத்து அவருக்கு தெரிந்த 5 பேர் கல் மற்றும் கம்பால் தாக்கியதாக கூறினார் என்றும், அவரை பரிசோதித்ததில் அவர் அரை மயக்க நிலையில் இருந்தார் என்றும், அவரது பேச்சு தேவையற்ற பேச்சாக இருந்தது என்றும், ஆகையால் அவரது மனநிலையை கருத்தில்கொண்டு அவரை உயர் சிகிச்சைக்காக மதுரை அரசு ராஜாஜி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார் என்றும், அங்கு அவர் உள்நோயாளியாக 03.12.2011 முதல் 07.12.2011 வரை சிகிச்சையில் இருந்தார் என்றும், அவருக்கு ஏற்பட்ட காயங்கள் சாதாரண காயங்கள் தான் என்று சான்று வழங்கினார் என்றும், விபத்து பதிவேட்டுடன் கூடிய காயச்சான்று அ.சா.ஆ.2 என்றும், மேற்சொன்னவாறு சுமார் 5 நபர்களோ, அல்லது அதற்கு மேல் நபர்களோ கல் மற்றும் கம்பால் தாக்கினால் தான் சொன்னவாறு காயங்கள் ஏற்பட வாய்ப்புகள் உண்டு என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

**4.7)** அ.சா.7 புகழேந்தி தனது சாட்சியத்தில் கடந்த 04.12.2011-ம் தேதி மதுரை மாவட்டம், கீழவளவு காவல்நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணிபுரிந்தபோது தன்னுடன் பணிபுரிந்த ராஜேந்திரன் கையொப்பம் தனக்கு நன்கு தெரியும் என்றும், சிறப்பு சார்பு ஆய்வாளர் ராஜேந்திரன் இறந்துவிட்டபடியால் அவர் தயார் செய்த ஆவணங்களை பார்த்து முதற்கட்ட புலன்விசாரணை சம்மந்தமாகவும் சாட்சியம் அளிக்கிறார் என்றும், கடந்த 04.12.2011-ம் தேதி காலை 10.30 மணியளவில் சிறப்பு சார்பு ஆய்வாளர் ராஜேந்திரன் கீழவளவு

காவல்நிலையத்தில் பொறுப்பில் இருந்தபோது ஜெயராஜ் (எ) மலர் என்பவர் கொடுத்த புகாரினை பெற்று குற்ற எண்.194/2011, இ.த.ச பிரிவுகள் 147, 323, 294(பி), 109 மற்றும் பெண்கள் துன்புறுத்தலை தடுக்கும் சட்டம் பிரிவு 4-ன் கீழ் வழக்கு பதிவு செய்துள்ளார் என்றும், அந்த முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.3 என்றும், பின்னர் முதல் தகவல் அறிக்கையுடன் புகாரினை இனைத்து நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தும், ஒரு நகலை தனது புலன்விசாரணைக்கு எடுத்துக்கொண்டும், சிறப்பு சார்பு ஆய்வாளர் ராஜேந்திரன் அன்றையதினமே 12.00 மணியளவில் சம்பவ இடம் சென்று சம்பவ இடத்தை பார்வையிட்டு சாட்சிகள் நல்லுச்சாமி மற்றும் பழனிச்சாமி முன்னிலையில் அ.சா.ஆ.4 பார்வை மகஜர் மற்றும் அ.சா.ஆ.5 மாதிரி வரைபடம் தயார் செய்தார் என்றும், சாட்சிகள் நல்லுச்சாமி, பழனிச்சாமி ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார் என்றும், சாட்சிகள் ராமு, பனையன், ஆகியோர்களை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார் என்றும், 24.12.2011-ம் தேதி ஜெயராஜ் (எ) மலர், தனசேகரன் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார் என்றும், 26.12.2011-ம் தேதி இவ்வழக்கினை மேல்விசாரணைக்கு தன்னிடம் ஒப்படைத்தார் என்றும், தான் இவ்வழக்கை மேற்கட்ட புலன்விசாரணைக்கு எடுத்துக்கொண்டு சம்பவ இடம் சென்று சாட்சிகளை விசாரித்தார் என்றும், சிறப்பு சார்பு ஆய்வாளரிடம் சாட்சிகள் தன்னிடமும் சொன்னதால் மறு வாக்குமூலம் பதிவு செய்யவில்லை என்றும், இவ்வழக்கில் காயம்பட்ட தனபாக்கியம் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார் என்றும், இவ்வழக்கின் எதிரிகள் அனைவரும் முன் ஜாமீன் பெற்றுள்ளதால் கைதுசெய்யவில்லை என்றும், இவ்வழக்கில் காயம்பட்டவருக்கு சிகிச்சை அளித்த மேலூர் அரசு மருத்துவர் மங்கையர்கரசி என்பவரை 04.04.2012-ம் தேதி விசாரித்து காயச்சான்றிதழ் பெற்று வாக்குமூலம் பதிவு செய்தார் என்றும், அன்றையதினமே இவ்வழக்கினை முதல் விசாரணை செய்த சிறப்பு சார்பு ஆய்வாளர் ராஜேந்திரன் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார் என்றும், இத்துடன் தனது புலன்விசாரணை முடித்து 04.04.2012-ம் தேதி 1-ம் எதிரி மீது 147, 323, 109 மற்றும் பெண்கள் துன்புறுத்தலை தடுக்கும் சட்டம் பிரிவு 4-ன் கீழும், 2 மற்றும் 4 எதிரிகள் மீது 147, 323 மற்றும் 4 of TNPHW -ன் கீழும், 5 முதல் 7 எதிரிகள் மீது 147, 323 இ.த.ச-ன் கீழும் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தார் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

THENDRAAL MUTHU DAKSNAMOORTHY

Digitally signed by THENDRAAL MUTHU DAKSNAMOORTHY
Date: 2026.03.10 06:08:11 +0530

**5)** <u>குற்றவியல் விசாரணை சட்டப்பிரிவு **313(1)**(ஆ)**-**ன் கீழான விசாரணை</u>

அரசு தரப்பு சாட்சிகள் முடிக்கப்பட்டதற்கு பின்னால் பதிவு செய்யப்பட்ட சாட்சிகளின் விசாரணையிலிருந்து குற்றம் சாட்டப்பட்டவர்களுக்கு பாதகமாக தோன்றும் சங்கதிகளை குறித்து கு.வி.மு.ச பிரிவு 313(1)(ஆ)-ன் கீழ் குற்றம்சாட்டப்பட்டவர்களிடம் எடுத்துக்கூறி விளக்கி வினவியபோது 2 முதல் 7 எதிரிகள் பொய் சாட்சியம் என்று அரசு தரப்பு சாட்சிகளை மறுத்துவிட்டார். மேலும் அவர்கள் தரப்பில் சாட்சிகள் உண்டா என வினவியபோது சாட்சிகள் இல்லை என்று சொன்னார்கள். அதனால் 2 முதல் 7 எதிரிகள் தரப்பில் சாட்சிகள் இல்லை என்று சாட்சியம் முடிக்கப்பட்டுள்ளது.

**6)** <u>அரசு தரப்பு வாதம் பின்வருமாறு:</u>

அரசு தரப்பில் கற்றறிந்த அரசு தரப்பு வழக்கறிஞர் தன்னுடைய வாதத்தில் அரசு தரப்பில் முன்னிறுத்தப்பட்ட சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் மூலம் 2 முதல் 7 எதிரிகள் தான் குற்றம் புரிந்துள்ளார்கள் என்று சந்தேகத்திற்கு இடமின்றி அரசு தரப்பில் நிரூபணம் செய்யப்பட்டுள்ளதாகவும், 2 முதல் 7 எதிரிகள் மீது உள்ள குற்றச்சாட்டுகளை நிரூபிக்கும் வகையில் அமைந்துள்ளதாகவும், எனவே 2 முதல் 7 எதிரிகளுக்கு தக்க தண்டனை வழங்குமாறு எடுத்துரைத்தார்.

**7) 2** <u>முதல் **7** எதிரிகள் தரப்பில் வாதம் பின்வருமாறு:</u>

2 முதல் 7 எதிரிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் இவ்வழக்கில் அரசு தரப்பில் முன்னிறுத்தப்பட்ட சாட்சிகளின் சாட்சியங்கள் அரசு தரப்பு வழக்கை உறுதிபடுத்தும் வகையில் இல்லை என்றும், எனவே 2 முதல் 7 எதிரிகள் மீது உள்ள குற்றம் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்படவில்லை என்றும், சந்தேகத்தின் பலனை 2 முதல் 7 எதிரிகளுக்கு வழங்கி 2 முதல் 7 எதிரிகளை விடுதலை செய்ய வேண்டும் என்று வாதிட்டார்.

**8)** <u>தீர்வு</u> **:-**

இரு தரப்பு வாதங்களும் கேட்கப்பட்டது. அனைத்து வழக்காவணங்களும் பரிசீலனை செய்யப்பட்டது.

**9)** அரசு தரப்பு வழக்குப்படி, கடந்த 03.12.2011-ம் தேதி இரவு சுமார் 7.30 மணிக்கு கொன்னப்பட்டி மந்தை பின்பு உள்ள ரோட்டில் 3-ம் எதிரி 1-ம் எதிரியின் தூண்டுதலின் பேரில் அசிங்கமாக பேசிக்கொண்டிருந்தவரை சாட்சி-2 கேட்டதற்கு எதிரிகள் அனைவரும் ஒன்றாக சேர்ந்து கொண்டு நாங்கள் தேர்தலில் ஜெயித்து விட்டோம் உங்களால் முடிந்ததை

THENDRAAL MUTHU DAKSNAMOORTHY Digitally signed by THENDRAAL MUTHU DAKSNAMOORTHY Date: 2026.03.10 06:08:17 +0530

பார்த்துக்கொள்ளுங்கள் என்று பேசிக்கொண்டு 3, 5 எதிரிகள் உருட்டுக்கட்டையால் சாட்சி-2ன் தலை மற்றும் உடம்பில் அடித்து சாதாரண காயத்தையும், மற்ற எதிரிகள் சாட்சி-2ஐ கையாலும், கல்லாலும் அடித்து சாதாரண காயத்தை ஏற்படுத்திய குற்றம் என்பது அரசு தரப்பு வழக்காகும்.

**10)** அ.சா.1 ஜெயராஜ் (எ) மலர் தனது சாட்சியத்தில் எதிரிகளை தனக்கு தெரியும் என்றும், சுமார் 6, 7 வருடங்களுக்கு முன்பாக ஒருநாள் மாலை சுமார் 7 மணியளவில் தங்கள் ஊரிலுள்ள மந்தைக்கும் எதிரிகளின் வீட்டிற்கும் இடையே பஞ்சாயத்து பேசிக்கொண்டிருந்தார்கள் என்றும், அப்போது அவர்கள் அசிங்கமாக பேசிக்கொண்டிருந்தார்கள் என்றும், அவர்களிடம் தனது அம்மா சென்று அசிங்கமாக பேசாதீர்கள் என்று சொன்னதற்கு எதிரிகள் அனைவரும் சேர்ந்து கம்பாலும், கையாலும் தனது அம்மாவை அடித்தார்கள் என்றும், அதில் தனது அம்மா கீழே படுத்துவிட்டார் என்றும், தான் தனது அம்மாவை தூக்கும்போது எல்லாரும் தன்னையும் அடித்தார்கள் என்றும், எதிரிகள் தன்னை கம்பை வைத்து வயிறு, நெஞ்சு ஆகிய பகுதிகளில் குத்தினார்கள் என்றும், பிறகு தனது அம்மாவை தூக்கிக்கொண்டு சென்று மேலூர் அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்த்தார் என்றும், அங்கிருந்து மேல்சிகிச்சைக்காக மதுரை அரசு இராஜாஜி மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்த்தார் என்றும், மதுரையில் தன் அம்மா ஒரு வாரம் சிகிச்சை எடுத்துக்கொண்டார் என்றும், மேலூர் அரசு மருத்துவமனையில் சிகிச்சையிலிருக்கும்போது தான் கீழவளவு காவல்நிலையம் சென்று புகார் கொடுத்தார் என்றும், தன்னிம் காட்டப்படும் அ.சா.ஆ.1 புகார் மனுவிலுள்ள கையெழுத்து தன்னுடையது தான் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

**11)** அ.சா.2 ராமு தனது சாட்சியத்தில் அ.சா.1-ஐ தனக்கு தெரியும் என்றும், எதிரிகளை தனக்கு தெரியும் என்றும், சுமார் 6, 7 வருடங்களுக்கு முன்பாக ஒரு நாள் சம்பவம் நடந்ததாக சொன்னார்கள் என்றும், சம்பவத்தை பற்றி தனக்கு நேரடியாக தெரியாது என்றும், இரண்டு நபர்களை மருத்துவமனைக்கு அழைத்துச்சென்றதாக சொன்னார்கள் என்று சாட்சியம் அளித்து பிறழ் சாட்சி ஆகியுள்ளார்.

**12)** அ.சா.3 தனசேகரன் தனது சாட்சியத்தில் அ.சா.1-ஐ தனக்கு தெரியும் என்றும், எதிரிகளை தனக்கு தெரியும் என்றும், சம்பவம் பற்றி தனக்கு ஒன்றும் தெரியாது என்றும், போலீசார் ஒரு பேப்பரில் கையெழுத்து வாங்கினார்கள் என்றும், வேறு எதுவும் தனக்கு தெரியாது என்றும் சாட்சியம் அளித்து பிறழ் சாட்சி ஆகியுள்ளார்.

THENDRAAL MUTHU DAKSNAMOORTHY
Digitally signed by THENDRAAL MUTHU DAKSNAMOORTHY
Date: 2026.03.10 06:08:22 +0530

**13)** அ.சா.4 பனையன் தனது சாட்சியத்தில் அ.சா.1-ஐ தனக்கு தெரியாது என்றும், அ.சா.1-ன் வீடு தூரத்தில் உள்ளது என்றும், எதிரிகளை தனக்கு தெரியும் என்றும், சம்பவம் பற்றி தனக்கு ஒன்றும் தெரியாது என்றும், போலீசார் ஒரு பேப்பரில் கையெழுத்து கேட்டார்கள் போட்டுக்கொடுத்தார் என்றும் சாட்சியம் அளித்து பிறழ் சாட்சி ஆகியுள்ளார்.

**14)** இவ்வழக்கின் அரசு தரப்பில் முன்னிலைப்படுத்தப்பட்ட சாட்சிகளில் புகார்தாரரான அ.சா.1-ஐ தவிர மற்ற அனைத்து சாட்சிகளும் அரசு தரப்பு வழக்கிற்கு ஆதரவாக சாட்சியம் அளிக்காமல் முன்னுக்குப்பின் முரணாகவே சாட்சியம் அளித்துள்ளார்கள். மேலும் இவ்வழக்கில் காயம்பட்டதாக சொல்லப்படும் அ.சா.1-ன் அம்மா தனபாக்கியத்தை 1 முதல் 7 எதிரிகள் உருட்டுக்கட்டையாலும், கையாலும், காலாலும் அடித்து ஊமைக்காயம் ஏற்படுத்தியதாகவும், அதனால் தனது அம்மா மயங்கிவிட்டதாகவும் சாட்சியம் அளித்துள்ளனர். மேலும் காயம்பட்டவருக்கு சிகிச்சை அளித்த அ.சா.6 தனது சாட்சியத்தில் தனபாக்கியத்தை மேலூர் அரசு மருத்துவமனையில் அவரது மகன் அ.சா.1 சிகிச்சைக்கு அழைத்து வந்ததாகவும், அப்போது தனபாக்கியம் தன்னை 5 பேர் கல் மற்றும் கம்பால் தாக்கியதாகவும் சொல்லியுள்ளார். அவர் அரை மயக்கத்தில் இருந்ததாகவும், அவரது பேச்சு தேவையற்றதாக இருந்ததாகவும், அதனால் அவரை உயர் சிகிச்சைக்காக அரசு இராஜாஜி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்ததாகவும் அங்கு அவர் 03.12.2011 முதல் 07.12.2011 வரை உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்ததாகவும் சாட்சியம் அளித்து காயம்பட்ட நபருக்கு ஏற்பட்ட காயம் சாதாரண காயம் என்று சான்று வழங்கியுள்ளார்.

**15)** மேலும் அ.சா.6 தனது குறுக்கு விசாரணையில் "மேற்கூறிய காயங்கள் வாகன விபத்திலும் ஏற்படும் என்றால் நான் பார்த்தபோது வெளிபுற காயங்கள் இல்லை. நான் கேட்டபோது காயம்பட்டவர் 5 பேர் தாக்கியதாக சொன்னார் என்றால் சரிதான், தெரிந்த 5 நபர்கள் என்றார். நான் சிகிச்சை செய்தபோது காயம்பட்டவர் சரியான மனநிலையில் இல்லை என்றால் சரிதான், அரை மயக்கநிலையில் தேவையற்ற சம்மந்தம் இல்லாமல் பேசினார்." என்று குறுக்கு விசாரணை செய்யப்பட்டுள்ளார். எனவே அ.சா.6-ன் சாட்சியத்தின் மூலமாக காயம்பட்ட தனபாக்கியத்திற்கு வெளிப்படை காயங்கள் எதுவும் இல்லை என்று தெரியவருகிறது. மேலும் அவர் தன்னை 5 நபர்கள் தாக்கியதாக சொல்லியுள்ளார். புகாரானது 7 நபர்கள் தாக்கியதாக கொடுக்கப்பட்டுள்ளது.

THENDRAAL MUTHU DAKSNAMOORTHY

Digitally signed by THENDRAAL MUTHU DAKSNAMOORTHY
Date: 2026.03.10 06:08:27 +0530

**16)** அ.சா.7 புகழேந்தி தனது சாட்சியத்தில் கடந்த 04.12.2011-ம் தேதி மதுரை மாவட்டம், கீழவளவு காவல்நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணிபுரிந்தபோது தன்னுடன் பணிபுரிந்த ராஜேந்திரன் கையொப்பம் தனக்கு நன்கு தெரியும் என்றும், சிறப்பு சார்பு ஆய்வாளர் ராஜேந்திரன் இறந்துவிட்டபடியால் அவர் தயார் செய்த ஆவணங்களை பார்த்து முதற்கட்ட புலன்விசாரணை சம்மந்தமாகவும் சாட்சியம் அளிக்கிறார் என்றும், கடந்த 04.12.2011-ம் தேதி காலை 10.30 மணியளவில் சிறப்பு சார்பு ஆய்வாளர் ராஜேந்திரன் கீழவளவு காவல்நிலையத்தில் பொறுப்பில் இருந்தபோது ஜெயராஜ் (எ) மலர் என்பவர் கொடுத்த புகாரினை பெற்று குற்ற எண்.194/2011, இ.த.ச பிரிவுகள் 147, 323, 294(பி), 109 மற்றும் பெண்கள் துன்புறுத்தலை தடுக்கும் சட்டம் பிரிவு 4-ன் கீழ் வழக்கு பதிவு செய்துள்ளார் என்றும், அந்த முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.3 என்றும், பின்னர் முதல் தகவல் அறிக்கையுடன் புகாரினை இனைத்து நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தும், ஒரு நகலை தனது புலன்விசாரணைக்கு எடுத்துக்கொண்டும், சிறப்பு சார்பு ஆய்வாளர் ராஜேந்திரன் அன்றையதினமே 12.00 மணியளவில் சம்பவ இடம் சென்று சம்பவ இடத்தை பார்வையிட்டு சாட்சிகள் நல்லுச்சாமி மற்றும் பழனிச்சாமி முன்னிலையில் அ.சா.ஆ.4 பார்வை மகஜர் மற்றும் அ.சா.ஆ.5 மாதிரி வரைபடம் தயார் செய்தார் என்றும், சாட்சிகள் நல்லுச்சாமி, பழனிச்சாமி ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார் என்றும், சாட்சிகள் ராமு, பனையன், ஆகியோர்களை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார் என்றும், 24.12.2011-ம் தேதி ஜெயராஜ் (எ) மலர், தனசேகரன் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார் என்றும், 26.12.2011-ம் தேதி இவ்வழக்கினை மேல்விசாரணைக்கு தன்னிடம் ஒப்படைத்தார் என்றும், தான் இவ்வழக்கை மேற்கட்ட புலன்விசாரணைக்கு எடுத்துக்கொண்டு சம்பவ இடம் சென்று சாட்சிகளை விசாரித்தார் என்றும், சிறப்பு சார்பு ஆய்வாளரிடம் சாட்சிகள் தன்னிடமும் சொன்னதால் மறு வாக்குமூலம் பதிவு செய்யவில்லை என்றும், இவ்வழக்கில் காயம்பட்ட தனபாக்கியம் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார் என்றும், இவ்வழக்கின் எதிரிகள் அனைவரும் முன் ஜாமீன் பெற்றுள்ளதால் கைதுசெய்யவில்லை என்றும், இவ்வழக்கில் காயம்பட்டவருக்கு சிகிச்சை அளித்த மேலூர் அரசு மருத்துவர் மங்கையர்கரசி என்பவரை 04.04.2012-ம் தேதி விசாரித்து காயச்சான்றிதழ் பெற்று வாக்குமூலம் பதிவு செய்தார் என்றும், அன்றையதினமே இவ்வழக்கினை முதல் விசாரணை செய்த சிறப்பு சார்பு ஆய்வாளர் ராஜேந்திரன் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார் என்றும், இத்துடன் தனது புலன்விசாரணை முடித்து 04.04.2012-ம் தேதி 1-ம்

THENDRAAL MUTHU DAKSNAMOORTHY

Digitally signed by THENDRAAL MUTHU DAKSNAMOORTHY
Date: 2026.03.10 06:08:33 +0530

எதிரி மீது 147, 323, 109 மற்றும் பெண்கள் துன்புறுத்தலை தடுக்கும் சட்டம் பிரிவு 4-ன் கீழும், 2 மற்றும் 4 எதிரிகள் மீது 147, 323 மற்றும் 4 of TNPHW -ன் கீழும், 5 முதல் 7 எதிரிகள் மீது 147, 323 இ.த.ச-ன் கீழும் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தார் என்றும் சாட்சியம் அளித்துள்ளார். இவ்வழக்கில் அ.சா.7-ன் சாட்சியம் புலன்விசாரணை குறித்து மட்டுமே அமைந்துள்ளது.

**17)** இவ்வழக்கில் எதிரிகள் ஊர் மந்தையில் பஞ்சாயத்து பேசிக்கொண்டிருந்தபோது அசிங்கமாக பேசிக்கொண்டிருந்தார்கள் என்றும், அதை கேட்க சென்ற அ.சா.1-ன் அம்மா தனபாக்கியத்தையும் அசிங்கமாக பேசினார்கள் என்றும், அ.சா.1 சாட்சியம் அளித்துள்ள நிலையில் என்ன வார்த்தை கொண்டு எதிரிகள் அசிங்கமாக பேசினார்கள் என்றும், அதனால் தனக்கு அல்லது அங்கிருந்தவர்களுக்கு அசௌகரியம் ஏற்பட்டது என்று எதுவும் அமையவில்லை. மேலும் எதிரிகள் தனபாக்கியத்தை தாக்கியதாக அவரது மகளான அ.சா.1-ஐ தவிர வேறு எந்த தனிப்பட்ட சாட்சியமும் அரசு தரப்பு வழக்கிற்கு சாட்சியம் அளிக்கவில்லை. மேலும் அ.சா.1-யும் எதிரிகள் தாக்கியதாக தனது முதல் விசாரணையில் சொல்லியுள்ள நிலையில் அதற்கான மருத்துவ ஆவணங்கள் எதுவும் அரசு தரப்பில் தாக்கல் செய்யவில்லை. மேலும் அ.சா.ஆ.2-ல் 5 நபர்கள் காயம்பட்ட தனபாக்கியத்தை தாக்கியதாக சொல்லியுள்ள நிலையில் இவ்வழக்கின் புகார் 7 நபர்கள் மீது கொடுக்கப்பட்டுள்ளது. எனவே இவ்வழக்கில் எதிரிகள் அனைவரும் ஒன்று சேர்ந்து பட்டியல் சாட்சி-2 தனபாக்கியத்தை அசிங்கமாக பேசியும் அ.சா.1-யும், அவரது தாயாரான தனபாக்கியத்தையும் தாக்கி காயம் ஏற்படுத்தினார்கள் என்பதற்கு அரசு தரப்பில் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கவில்லை என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

**18)** முடிவாக, 2 மற்றும் 4 முதல் 7 எதிரிகள் மீது இ.த.ச பிரிவுகள் 147, 323 மற்றும் 4 of TNPHW Act-ன் கீழும், 3-ம் எதிரி மீது இ.த.ச பிரிவுகள் 147, 323, 294(பி) மற்றும் 4 of TNPHW Act-ன் கீழும் சுமத்தப்பட்டுள்ள குற்றங்கள் அரசு தரப்பில் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்படவில்லை என்று தீர்மானித்து, சந்தேகத்தின் பலனை எதிரிக்கு அளித்து அவர்கள் குற்றவாளிகள் இல்லை என இந்நீதிமன்றம் முடிவு செய்து, குவிமுச பிரிவு 248(1)-ன் கீழ் 2 முதல் 7 எதிரிகளை விடுதலை செய்து, இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது.

**19)** இவ்வழக்கில் வழக்கு சொத்துக்கள் எதுவும் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. அதனால் அது பற்றி உத்தரவு எதுவும் பிறப்பிக்கவில்லை.

THENDRAAL MUTHU DAKSNAMOORTHY

Digitally signed by THENDRAAL MUTHU DAKSNAMOORTHY
Date: 2026.03.10 06:08:37 +0530

**20)** மேலும் 2 முதல் 7 எதிரிகள் குவிமுச பிரிவு 437(A)-ன் கீழ் எழுதிக்கொடுத்துள்ள பிணைப்பத்திரம் 6 மாதங்கள் முடிவடைந்த பின்பு தானாக ரத்தாகிவிடும்.

இந்த தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்தருக்கு நேரடியாக சொல்லப்பட்டு நீதிமன்ற கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு திறந்த நீதிமன்றத்தில் இன்று 2026-ம் ஆண்டு மார்ச் மாதம் 10-ம் தேதி அவையறிய பகரப்பட்டது.

THENDRAAL MUTHU DAKSNAMOORTHY
Digitally signed by THENDRAAL MUTHU DAKSNAMOORTHY
Date: 2026.03.10 06:08:41 +0530

நீதித்துறை நடுவர்,
மேலூர்.

<u>இணைப்பு</u>

<u>அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகள்</u> :-

| வரிசை எண் | விசாரிக்கப்பட்ட தேதி | சாட்சிகளின் பெயர்கள் |
|---|---|---|
| அ.சா.1 | 06.07.2018 | ஜெயராஜ் (எ) மலர் |
| அ.சா.2 | 06.07.2018 | ராமு |
| அ.சா.3 | 21.08.2018 | தனசேகரன் |
| அ.சா.4 | 21.08.2018 | பனையன் |
| அ.சா.5 | 21.08.2018 | பழனிச்சாமி |
| அ.சா.6 | 23.07.2025 | மங்கையர்கரசி |
| அ.சா.7 | 23.02.2026 | புகழேந்தி |

<u>அரசு தரப்பில் குறியிடப்பட்ட சான்றாவணங்கள்</u> :-

| வரிசை எண் | குறியீடு செய்த சாட்சி | ஆவணங்களின் விபரங்கள் |
|---|---|---|
| அ.சா.ஆ.1 | அ.சா.1 | புகார் |
| அ.சா.ஆ.2 | அ.சா.6 | விபத்து பதிவேட்டுடன் கூடிய காயச்சான்று |
| அ.சா.ஆ.3 | அ.சா.7 | முதல் தகவல் அறிக்கை |
| அ.சா.ஆ.4 | அ.சா.7 | பார்வை மகஜர் |
| அ.சா.ஆ.5 | அ.சா.7 | மாதிரி வரைபடம் |

THENDRAAL MUTHU DAKSNAMOORTHY
Digitally signed by THENDRAAL MUTHU DAKSNAMOORTHY
Date: 2026.03.10 06:08:46 +0530

<u>அரசு தரப்பு சான்றுப்பொருட்கள்</u>**:-** <u>இல்லை</u>

<u>**2** முதல் **7** எதிரிகள் தரப்பில் விசாரிக்கப்பட்ட  சாட்சிகள்</u>,

<u>குறியீடப்பட்ட  சான்றாவணங்கள் மற்றும் சான்று பொருட்கள்</u>**:** இல்லை

<u>குறிப்பு</u>

1) வழக்கு விசாரணைகாலத்தில், 2 முதல் 7 எதிரிகள் நீதிமன்ற பிணையிலிருந்துள்ளார்கள்.

2) எந்தவொரு சாட்சியும் 3 தினங்களுக்கு மேல் நிறுத்தி வைக்கப்படவில்லை.

3) வழக்கின் முடிவு காவல்துறைக்கு தெரிவிக்கப்பட்டது

4) தீர்ப்பின் நகல், மாண்புமிகு தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவருக்கு பணிந்து சமர்ப்பிக்கப்பட்டது.

THENDRAAL MUTHU DAKSNAMOORTHY

Digitally signed by THENDRAAL MUTHU DAKSNAMOORTHY
Date: 2026.03.10 06:08:52 +0530